1993 ஏப்ரல் 8]

பொற்கால ஆட்சியில் தமிழகத்தில் பொது மக்களின் கண்பார்வைக்கோ அல்லது விஸ்கோஸ் ஆலைகள் போன்ற வற்றின் கழிவுநீரால் ஏற்படும் இன்னல்களை, உடல் கூறுகளை பாதிக்கும் ஆலைகளை நகர மையத்திலோ அல்லது அதிகமாக வாழும் மக்கள் தொகை கொண்ட பகுதியிலோ இல்லாமல் ஒதுக்குப் புறமாக இந்த மாதிரி தொழிற் சாலைகளை அமைத்தால் நாட்டு மக்களுக்கும் நல்லது. கண்களைப் போல் காத்து வரும் இதயதெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவியின் ஆட்சியில் இதற்கு அமைச்சர் அவர்கள் இங்கு விரிவாக பதில் அளித்துள்ளார். அதற்கு நன்றியைக் கூறி, இதற்கு ஒரு முடிவு எடுப்பாரா என்பதை அமைச்சர் மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு தொழிற்சாலை என்பது எங்கே அமைக்கப்பட வேண்டும் என்று ஏற்கெனவே வரைமுறை இருக் கிறது. ரெசிடென்சியல் ஏரியாவிலே வரக்கூடாது. பொலூ ஷன் இருந்தால் அதை எங்கெங்கே அமைக்கக்கூடாது என்று, பொலூஷனை தடுப்பதற்கு அல்லது அதை டிரீட் பண்ணு வதற்கு என்னென்ன நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று, சொல்லி வரைமுறை இருக்கிறது. இப்பொழுது நாம் பார்த்துக்கொண்டிருப்பது எல்லாம் ஏற்கெனவே வந்துவிட்ட தொழிற்சாலைகள். எனவே, அதை சரி செய்வதற்காக அதிலே இருக்கின்ற பிரச்சினைகளை தீர்ப்பதற்காக அரசாங்கம் கடுமையான நடவடிக்கைகளைத் தொடர்ந்து மேற்கொண்டி ருக்கிறது. நமக்கு இருக்கின்ற சிக்கலே, ஒரே நாளிலே அந்தத் தொழிற்சாலைகளை நாம் மூட முடியும். ஆனால் அப்படி மூடிவிட்டால் தொழில்கள் நசிந்துவிடும் என்பது மட்டுமல்ல ஆயிரக்கணக்கான பேர் பணிக்குச் செல்ல முடியாமல் பாதிக் கப்படுவார்கள் என்ற காரணத்தினால் இது போன்ற நட வடிக்கைகளை கொஞ்சம் கொஞ்சமாக நாம் எடுக்க வேண்டிய அவசியம் இருக்கிறது. எனவே, இவையெல்லாம் வந்து விட்ட தொழிற்சாலைகள். இனிமேல் வரக்கூடிய தொழிற் சாலைகளை இப்படித்தான் அமைக்க வேண்டுமென்ற நிலை யிலே மிகக் கடுமையான நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டி ருக்கிறோம் என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 286. திரு டி. சுதர்சனம், இருக்கையில் இல்லை. திரு.வி. பி. சந்திரசேகர் கேட்கிறார். மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

286—

வாகனவரி மூலம் கிடைக்கும் தொகையை சாலைப் பராமரிப் புக்குச் செலவிடுதல்.

*10252—திரு. டி. சுதர்சனம்:

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர்—கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) வாகனவரி மூலம் தமிழக அரசுக்கு வரும் வரிப்பணம் முழுவதும் சாலைப் பராமரிப்புக்காகச் செலவிடும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. வி. பி. சந்திரசேகர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாகனப் போக்குவரத்திற்கும், சாலைப் பராமரிப்பிற்கும் உள்ள தொடர்பு ஒரு குடும்பத்திலே கணவன் மனைவிக்கு இருக்கின்ற உறவு போன்றது. ஆகவே இந்த வரியை சாலைப் பராமரிப்புக்குச் செலவிடுவதுதான் சரியான வழி என்று கருதுகிறேன். அரசு செலவிடுமா, எந்தெந்த வழிகளில் செலவிடும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதிலே வருகின்ற முழுத் தொகையையும் இந்தத் துறைக்காக செலவிடப்படுகிறதா என்ற கேள்வி கேட்கின்றபோது இல்லையென்று நான் குறிப்பிட்டேன். ஆனால் இதைக்காட்டிலும் இரு மடங்கு அளவிற்கு நெடுஞ்சாலை துறைக்காக நம் ஒப்பற்ற தமிழக முதல்வர் புரட்சித்தலைவி அவர்கள் நிதி ஒதுக்கித் தந்திருக்கிறார்கள். இந்த நிதியைப் பொறுத்தவரையிலும் முதல் அமைச்சர் விபத்து நிவாரண நிதி என்ற முறையில் 50 இலட்சம் ரூபாயும், போக்குவரத்து முன்னேற்றப்பணிகள் என்ற முறையில் 16 இலட்சம் ரூபாயும் உள்ளாட்சி மன்றங்கள், மாநகராட்சி, நகராட்சி போன்றவற்றிற்காக மட்டும் 22 கோடியே 53 இலட்சம் ரூபாய் ஒதுக்கி செலவு செய்யப்படுகிறது சாலைப் பராமரிப்புக்கு மட்டும் 21 கோடி ரூபாய் இந்த நிதியிலிருந்து ஒதுக்கப்பட்டிருக்கிறது. வேறு மாநிலத்தை நாம் ஒப்பிட்டுப் பார்க்கும்போது நம்முடைய மாநிலத்தில் $7\frac{1}{2}$ சதவீதம் இந்த நிதிக்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதே போல கேரள மாநிலத்தில் 6 சதவீதம் கர்நாடக மாநிலத்தில் 5 சதவீதம் பாண்டிச்சேரியிலே இல்லை. ஆனாலும் கூட இதிலே வருகின்ற நிதியை பொறுத்த வரையிலும் 1991-92 ல் 257 கோடி ரூபாய் இதிலே வரி வசூல்செய்யப்

1993 ஏப்ரல் 8]

பட்டிருக்கிறது. 1992—93-ல் 280 ஆக உயர்ந்திருக்கிறது 280 கோடியைக் காட்டிலும் அதிகமாக சாலை மேம்பாட்டிற்காக நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் இந்த ஆண்டு செலவு செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. க. அர்ச்சுனன்.

திரு. க. அர்ச்சுனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாகன வரி மூலம் வருகின்ற வருமானம் முழுவதையும் ரோடு பராமரிப்புக்குச் செலவழிக்க வேண்டுமென்று குறிப்பிடும் போது, மாண்புமிகு உறுப்பினர் சந்திரசேகர் கணவன் மனைவி உறவைப் பற்றி குறிப்பிட்டார்கள். கணவன் சம்பாதிக்கின்ற முழு வருமானமும், மனைவிக்கே போய் சேருகின்ற நிலை இருக்கின்றதா அல்லது வேறு நல்ல காரியங்களுக்குப் பயன்படுகின்றதா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கணவன் சம்பாதிக்கின்ற அனைத்தும் மனைவிக்கே தான் சேருகிறது. மனைவி என்ன யோசனையை சொல்கின்றாரோ அந்த யோசனைகளை அரசு செய்து கொண்டிருக்கிறது. ஆகவே தான் இந்த அரசைப் பொறுத்த வரையிலும் 280 கோடி இந்த ஆண்டு வருமானம் என்று சொன்னால் 280 கோடி ரூபாய்க்கு மேலும் நெடுஞ்சாலைத் துறையில் மற்றும் இருக்கின்ற சாலைப் பராமரிப்பிற்காக, உள்ளாட்சித் துறை, மாநகராட்சி, நகராட்சிகளுக்காக மேம்பாட்டிற்காக செய்து கொண்டிருக்கிறோம் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 287,, டாக்டர் எஸ். சுந்தரராஜ், மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர்.

287—

பரமக்குடி எமனேஸ்வரத்திலுள்ள கூட்டுறவுக் கைத்தறி நெசவாளர் சங்கங்கள்.

*10878—டாக்டர் எஸ். சுந்தரராஜ் :

மாண்புமிகு கைத்தறித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —:

(அ) இராமநாதபுரம் மாவட்ட பரமக்குடி எமனேஸ்வரத்தில் உள்ள கூட்டுறவு கைத்தறி நெசவாளர் சங்கங்களின் தள்ளுபடி நிலுவைத் தொகை எவ்வளவு?